**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2017**

-----------------------------------------------------------------------------------

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 யூன் 08 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.6

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் வரை அந்த சொத்துக்களின் வகுப்பிற்கு உரித்தாகின்ற சகல சொத்துக்கள் முழுவதும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக நிறுவனத்திற்குச் சொந்தமான 08 வாகனங்களில் 06 வாகனங்கள் மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது சனாதிபதி செயலகத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த இரண்டு வாகனங்களுக்குரிய மீள் மதிப்பீடு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 5,750,000 தொகை நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய மிகைக்கு / பற்றாக்குறைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 9,162,620 கிரயமான கணனி, துணைப்பாகங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

நிறுவகத்திற்கு கிடைக்கின்ற மூலதன மானியங்களைக் கணக்கு வைக்கும் கொள்கை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

03 வளிப் பதனாக்கி இயந்திரங்களை பொருத்தும் ஒப்பந்தத்திற்குச் செலுத்தப்பட்ட 1,821,600 தொகையான தேறிய பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டமையினால் நிறுத்தி வைத்தல் பணம் மற்றும் சொத்துக்கள் ரூபா 176,000 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் தொடர்பாக ஒப்பந்தகாரரினால் வைப்புச் செய்யப்பட்டு மீளச் செலுத்தப்பட்ட ரூபா 120,000 கூட்டுத்தொகையான வைப்பை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியில் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களின் பெறுமதி ரூபா 55,000 ஆகும்.

(ஆ) சேவையை விட்டுச் சென்ற நிறுவகத்தின் ஊழியர் ஒருவரிடமிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 19,898 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பாடநெறிக்காக 02 அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,265,800 தொகை 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலவீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 9,612,620 பெறுமதியான கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 9.3.1(ஆ) வழிகாட்டி | மைலோ மீற்றர் ஒரே எண்ணிக்கையைக் கொண்டிருந்த போது மோட்டார் வண்டி 02 தடவைகளில் ரூபா 312,613 தொகையான பழுதுபார்த்தலுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 59,809,832 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 23,080,772 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 82,890,604 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது திறைசேரி மானியம் ரூபா 16,550,849 இனால் குறைவடைந்தமை மற்றும் பயிற்சிச் செலவினம் ரூபா 36,712,133 இனாலும், நிர்வாகச் செலவினம் ரூபா 36,129,962 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளினது நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 15,608,863 தொகையான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 59,809,832 பற்றாக்குறைக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,466,729 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு வரையில் ரூபா 49,025,649 வரை தொடர்ச்சியான முன்னேற்றமொன்றைக் காண்பித்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அது ரூபா 26,829,859 மறைப் பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

2016 ஆம் ஆண்டின் போது 15:1 ஆன நடைமுறை விகிதம் 2017 ஆம் ஆண்டின் போது 0.9:1 வரையும், விரைவு விகிதம் 15:1 முதல் 0.8:1 வரையும் வீழ்ச்சியடைந்திருந்தது. அமைச்சிலிருந்து நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நடாத்தப்பட்ட பாடநெறிக்காக செலுத்த வேண்டிய செலவினம் நடைமுறைப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அதற்கான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 990,000 தொகையான பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான சான்றதழ் பாடநெறியொன்று மற்றும் 02 டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துவதற்கும் அதற்காக 06 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 23,995 தொகை செலவில் ஒரு சான்றிதழ் பத்திர பாடநெறி மாத்திரம் நடாத்தப்பட்டு 06 நபர்களுக்கு பயிற்சியளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆங்கில மொழி கற்பிக்கும் சான்றதழ் பத்திர பாடநெறிக்காக பாடவிதானங்களைத் தயாரித்தல், சிங்களம் மற்றும் தமிழ் இரண்டாம் மொழி கற்பிக்கும் 02 பாடநெறிகளை நடாத்துவதற்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக ''நவமு'' பாடநெறிகள் 10 ஐ நடாத்துவதற்கும் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,140,000 இன் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 27,350 செலவில் ஒரு ''நவமு'' பாடநெறி மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 04 கட்டங்களின் கீழ் 144 தேசிய மொழிப் பயிற்சி பாடநெறிகளில் 6,850 மணித்தியாலங்களை மேவுகை செய்வதற்கு ரூபா 3,190,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,774,325 செலவில் 34 பாடநெறிகள் 3958 மணித்தியாலங்களை மேவுகை செய்திருந்தது. அதன் பிரகாரம் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் 23 சதவீதம் மற்றும் ஈடுபடுத்தப்பட்ட மணித்தியாலங்களின் அளவு 58 சதவீதம் என்ற குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ''சமூக மற்றும் ஒன்றிணைந்த செயற்திட்டத்திற்கான இலகுபடுத்தல்'' செயற்திட்டத்திலிருந்து 2017 மார்ச் 29 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த அலுவலக உபகரணங்களின் 176 விடயங்களில் 33 விடயங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 143 விடயங்களும் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூலை 31 வரையிலும் நிறுவன வளவில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 814,231 செலவில் அகலவத்த பயிற்சி நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் இந்த மின்பிறப்பாக்கிக்கான ஒரு வருட கால உத்தரவாதக் காலமும் கடந்திருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்திற்காக அலுவலக் கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 02 வருட காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக ரூபா 30,000,000 தொகையான வாடகை உடன்படிக்கையில் 2016 திசெம்பர் மாதம் இணங்கப்பட்ட ரூபா 11,250,000 முற்பணத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய கட்டிடத்தில் நிறுவகத்தை நடாத்திச் செல்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு கட்டிட உரிமையாளரினால் 2017 ஏப்ரல் வரை தாமதித்ததன் காரணமாக புதிய கட்டிடத்தில் நிறுவகத்தை தாபித்தல் 2017 மே வரை தாமதமாகியிருந்தது. அதன் காரணமாக 2017 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலத்திற்குரிய கட்டிட வாடகை மற்றும் அதற்குரிய வரித்தொகையாக செலுத்தப்பட்ட ரூபா 5,865,000 தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு உட்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக ஆர்வத்தைக் காண்பிக்கின்ற தரப்பினரை இனங்கண்டு அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

(ஆ) பாடசாலை மாணவர்களுக்காக தமிழ் / சிங்களம் / ஆங்கிலம் மொழிக் கல்வியை வழங்குதல் இலக்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும், கல்வி அமைச்சு நோக்கங்களை அமுல்படுத்தும் நிறுவனமொன்றாக இனங்கண்டிருக்கவில்லை.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையும் போது உரிய பணிகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான கட்டங்கள் இனங்காணப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 6.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்காக செயல்நடைமுறைக் கோவையொன்று தயாரிப்பதற்காக 2014 நவம்பர் 04 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 45,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வரைவிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக அதனை நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் போது பயன்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) 2015 இன் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 20 பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட நலிவுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்குரிய நிலுவை வருமானம் அறவிடப்படாமை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய கொடுப்பனவுகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) பெறுகை நடவடிக்கைகள் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் நியதிகளுக்கு முரணாக பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றமை. |